Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC.323/2022 PW-1**

Name : ஜெயமூர்த்தி
Father / Husband name : ராஜவேல்
Village : சிங்கனூர்
Age : 35
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 04.09.2025

Complainant present. Accused present. Both side counsel present.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை 12.05 - 01.00**

புகாரில் என்ன பரிகாரம் கேட்டு கொடுத்துள்ளேன் என்றால் பணம் கேட்டு கொடுத்துள்ளேன். வேறு எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். ( சாட்சி பரிகாரம் என்ன என்று கேட்டு பதில் அளிக்கிறார் ) எனது ஊர் திண்டிவனம் தாலுக்காவை சேர்ந்தது என்றால் சரிதான். கோபி என்பவரை என்ன ஊர் என்றால் பாண்டிச்சேரியில் கவுண்டன்பாளையம். மேற்படி ஊர் எந்த ஏரியாவில் உள்ளது என்றால் பாண்டிச்சேரியில் தட்டாஞ்சாவடி அடுத்து உள்ளது. கவுண்டன்பாளையம் எந்த தாலுக்காவில் உள்ளது என்றால் தெரியாது. எனது ஊரிலிருந்து எதிரியின் ஊர் எத்தனை கி.மீ. இருக்கும் என்றால் சுமார் 40 கி.மீ. இருக்கும். நானும் எதிரியும் ஒரே ஊர் இல்லை என்றால் சரிதான். கோபி எனது உறவினர் இல்லை என்றால் சரிதான், மாமாவின் மூலம் பழக்கம்.

2. கோபிக்கு எனது ஊரில் உறவினர்கள் மற்றும் சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். அதனால் கோபி எனது ஊருக்கு வரவேண்டிய அவசியமில்லை என்றால் சரிதான். கோபி என்னுடன் படிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கும் கோபிக்கும் வயதின் அடிப்படையில் எந்த பழக்கமும் இல்லை என்றால் சரிதான். எனக்கு விவசாய தொழில் என்றால் சரிதான். எனக்கு சொந்தமாக எத்தனை

ஏக்கர் உள்ளது என்றால் 1 1/2 ஏக்கர் உள்ளது, பக்கத்தில் குத்தகை நிலம் உள்ளது. நான் சிறுவிவசாயி என்றால் சரிதான். எனது நிலத்தில் 3 மாதத்திற்கு ஒருமுறை தான் பயிர் செய்யமுடியும் என்றால் சரிதான். 1 1/2 ஏக்கர் பயிர் செய்ய எவ்வளவு செலவு ஆகும் என்றால் பயிர்களை பொறுத்து செலவு வேறுபடும். எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்றால் சுமார் ரூ.17,000/-, ரூ.20,000/- வரும். எனது குடும்ப செலவு என்ன ஆகும் என்றால் ரூ.7000/- முதல் ரூ.10,000/- ஆகும், விவசாயத்தை தவிர நான் மாடுவைத்துள்ளேன், வெளிவேலைக்கு செல்வேன்.

3. எனக்கு வியாபாரம் உள்ளதா என்றால் இல்லை. குடும்பத்தை எனது அம்மா தான் பார்க்கிறார் என்றால் இல்லை, நான், அப்பா, அம்மா பார்த்துக்கொண்டோம். எனது அப்பா இறந்த பிறகு எனது அம்மா குடும்பத்தை பார்த்துக்கொள்கிறார் என்றால் சரிதான். 1 1/2 ஏக்கர் நிலத்தில் ரூ.60,000/- போதுமான வருமானம் இல்லை, எனது குடும்பம் வறுமை நிலையில் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். போதிய வருமானம் இல்லை என்பதால் எனக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரியல்ல. விவசாயத்திற்கு கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கும் பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. விவசாயத்திற்கு கூட்டுறவு வங்கியில் கடன் வாங்குவதால் எனக்கு போதிய வருமானம் இல்லை என்றால் சரியல்ல, கடந்த இரண்டு வருடமாக தான் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்குகிறேன்.

4. புகாரில் இரண்டு நபர்களின் பெயர்களை குறிப்பிட்டுள்ளேன் அவர்கள் யார் என்றால் நான் குறிப்பிடவில்லை. ஆசைத்தம்பி யார் என்றால் எனது தாய்மாமா. அவருக்கு பூர்வீக ஊர் எந்த ஊர் என்றால் பாண்டிச்சேரியில் குண்டுபாளையம், வீரய்யாவீதி ஆகும். எனது மாமா குண்டுபாளையம் ஊரை சேர்ந்தவர் அல்ல என்றால் சரியல்ல. எனது மாமா தற்போது பைனான்ஸ் தொழில் செய்கிறார் என்றால் தற்போது இல்லை, இதற்கு முன்பாக நடத்திருந்தார். நான் பைனான்ஸ்

தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோபி எனது மாமாவிடம் கடன் வாங்கியுள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது மாமா பைனான்ஸ் தொழில் செய்வதால் எதிரிக்கும் எனது மாமாவிற்கு கொடுக்கல் வாங்கல் மூலமாக பழக்கம், எனக்கு பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. புகாரில் சொன்ன விவரங்கள் யார் சொல்லியது என்றால் எனது மாமா சொல்லி புகாரை தாக்கல் செய்தேன், முதல் விசாரணையில் உள்ள விரவங்கள் நான் சொல்லியது, எனது மாமா நீதிமன்றத்திற்கு சொல்லுமாறு சொன்னார்.

5. பிரமாண வாக்குமூலத்தில் எதிரியை எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன், எதிரிக்கு என்னை தெரியும் என்று வாசகம் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் 2வது பத்தியில் எதிரி புதுச்சேரியில் எனது மாமாவின் வீட்டின் அருகே வசிப்பதால் எதிரியின் மீது நம்பிக்கையின் பேரில் கடன் கொடுத்ததாக உள்ளது, மாமா சொன்னதன்பேரில் கடன்கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். பழக்கம் இல்லாத நபருக்கு கடன் கொடுக்கும்போது எனது மாமாவிடம் கேட்டு கொடுத்ததாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி எனது மாமாவிடம் வாங்கிய கடனை மாமா என்னை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த கடனையும் எதிரி எனது மாமாாவிடம் கொடுத்துவிட்டார், அதிகப்பணம் பெற இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. பொதுவாக நல்ல பழக்கம் உள்ள நபர்களுக்கு கடன் கொடுப்பார்கள் என்றால் சரிதான். கடன் கொடுத்தால் ஆதரமாக புரோநோட் எழுதி வாங்குவார்கள் என்றால் சரிதான். யாருக்கும் கைமாற்றாக கடன் கொடுக்கும் பழக்கம் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. கடன் கொடுத்தால் எழுதி வாங்குவேன் என்றால் சரிதான். எதிரி கோபியிடம் கடன் கொடுத்தபோது புரோநோட் எழுதி வாங்கினேனா என்றால் கடனுறுதி பற்று ஆவணம் எழுதிவாங்கினேன். எவ்வளவு

ரூபாய்க்கு கடனுறுதி பற்று எழுதிவாங்கினேன் என்றால் ரூ.4,75,000/- க்கு எழுதி வாங்கினேன். மேற்படி விவரத்தை புகார், சட்டஅறிவிப்பு, வாக்குமூலத்தில் சொன்னேனா என்றால் இல்லை. உண்மையில் கடன் கொடுத்திருந்தால் புகார், அறிவிப்பு, முதல் நிலை சாட்சியத்தில் சொல்லியிருப்பேன், இந்த வழக்கு ஜோடிக்கப்பட்ட வழக்கு என்பதால் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி புரோநோட்டை எனது மாமாவிற்கு எழுதிகொடுத்தார், எதிரி கடனை பைசல் செய்த பின்னரும் அதனை கொடுக்காமல் என்னை வைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7. எதிரி எந்த காலத்திலும் புரோநோட் எழுதிகொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வெற்றுத்தாளில் எதிரி எழுதி கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை, எழுதிய பேப்பரில் கையொப்பம் செய்துகொடுத்தார். எந்த தேதியில் எங்கு வைத்து எழுதிகொடுத்தார் என்றால் எதிரியின் டிரான்ஸ்போர்ட்டில் வைத்து 05.10.2021 அன்று எழுதிகொடுத்தார். அந்த டிரான்ஸ்போர்ட் எதிரியின் பெயரில் உள்ளதாக ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எதிரி டிரான்ஸ்போர்ட் நடத்துவதாக எனது மாமா சொல்லி தான் எழுதினேன் என்றால் அவர் சொல்லி தான் எனக்கு தெரியவந்தது, நான் எதிரியின் அலுவலகத்திற்கு சென்றுள்ளேன். ரூ.4,75,000/- தொகை நான் வங்கியில் வைத்திருந்தேனா என்றால் இல்லை, நான் பயிர் செய்த பணமும், எனக்கு திருமணத்திற்கு வைத்திருந்த பணமும் கையில் வைத்திருந்தேன். மேற்படி விவரத்தை புகாரில் சொன்னேனா என்றால் இல்லை. அதிக தொகையை நான் வங்கியில் வைத்திருப்பேனா என்றால் இல்லை. கையில் தான் வைத்திருப்பேன் என்றால் சரிதான்.

8. இவ்வளவு பெரிய தொகை என்னிடம் இருப்பதற்கு வாய்ப்பில்லை, அதனை நான் கையில் வைத்திருக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த வங்கியின் காசோலை கொடுத்தார் என்றால் பாரத ஸ்டேட் பேங்க், பாண்டிச்சேரி காந்தி நகர் கிளை. மேற்படி வங்கி கிளை இல்லை என்றால் சரியல்ல. காலாவதியான

காசோலையை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 05.10.2021 அன்று பாரத ஸ்டேட் பேங்க், பாண்டிச்சேரி காந்தி நகர் கிளை இல்லை என்றால் சரியல்ல. காசோலை எந்த தேதியில் கொடுத்தார் என்றால் 10.03.2022 அன்று கொடுத்தார். கடன் கொடுத்த தேதியில் எதிரி காசோலை கொடுக்கவில்லை என்றால் சரிதான். 10.03.2022 அன்று கடனை திருப்பி கேட்கும்போது பணம் கையில் இருந்தால் பணமாக கொடுப்பார், பணம் இல்லை யென்றால் காசோலை கொடுப்பார் என்றால் எதிரி காசோலையை தான் கொடுத்தார். அன்றையதினம் எதிரியிடம் பணமில்லை என்றால் எனக்கு தெரியாது. காசோலை கொடுத்த தேதியில் அன்றையதினமே வங்கியில் செலுத்தினோ என்றால் இல்லை.

9. முதல் நிலை சாட்சியத்தில் 10.03.2022 அன்று காசோலை கொடுத்ததாக சொல்லியுள்ளேன், அன்றையதினமே வங்கியில் செலுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை, மறுநாள் வங்கியில் செலுத்தினேன். மேற்படி காசோலையை நான் எந்த வங்கியில் செலுத்தினேன் என்றால் திண்டிவனம் மெயின் பிரான்ச் இந்தியன் வங்கியில் செலுத்தினேன். எந்த தேதியில் வங்கியிலிருந்து மெமோ வந்தது என்றால் 11.03.2022. காசோலையை நானே பாண்டிக்கு சென்று வாங்கிவந்தேனா என்றால் 10.03.2022 அன்று பாண்டிச்சேரிக்கு சென்று எதிரியிடமிருந்து காசோலையை நான் வாங்கிவந்தேன். நான் சொல்வது அனைத்தும் பொய், எதிரி காசோலையை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காசோலை திருப்பிய பிறகு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். வங்கியில் செலுத்திய காசோலை எந்த தேதியில் திருப்பப்பட்டது என்றால் 11.03.2022 அன்று போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டது. நான் வங்கியில் காத்திருந்தேனா என்றால் இல்லை.

10. எத்தனை மணிக்கு வங்கி மெமோ வந்தது என்றால் நினைவில்லை. எனது மாமா தான் காசோலையை வங்கியில் செலுத்தினார் என்றால் சரியல்ல.

காசோலை திருப்பப்பட்டவுடன் என்ன செய்தேன் என்றால் எதிரியிடம் கேட்டேன், அவர் திரும்ப தருவதாக சொன்னார், ஆனால் தரவில்லை. அவ்வாறாக எதிரியிடம் நான் பணத்தை திரும்ப கேட்கவில்லை என்றால் சரியல்ல. அடுத்த என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் அறிவிப்பு கொடுத்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். எதிரியிடம் எழுத்து மூலமாக பணம் கேட்டேனா என்றால் இல்லை, அறிவிப்பு கொடுத்தேன். வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கை இதற்கு முன்பாக எந்த வழக்கறிஞர் நடத்தினார் என்றால் வழக்கறிஞர் சபரி. அவர் எந்த ஊர் என்றால் தெரியாது. எதிரி என்னிடம் எந்த காலத்திலும் கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. சட்டப்படி எதிரி எனக்கு கடன் கொடுக்கவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

Sd/ M.Elavarasi,

Judicial Magistrate No.1, Tindivanam